செ.வெ. எண்: 469 நாள்: 08–08–2012

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (ட்டி) துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**

**தமிழ்நாடு அரசு**

**தமிழ்நாடு வக்ஃப் வாரிய உறுப்பினர்கள் தேர்தல்**

**செய்திக் குறிப்பு**

29.08.2012 அன்று நடைபெறவுள்ள தமிழ்நாடு வக்ஃப் வாரிய உறுப்பினர் (முத்தவல்லி ) தேர்தலுக்கு தபால் மூலம் தங்கள் வாக்கை பதிவு செய்ய விரும்புகின்ற வாக்காளர்கள் இணைப்பு–II-ல் குறிப்பிட்டுள்ள படிவத்தை முழுமையாக பூர்த்தி செய்து, அந்தந்தப் பகுதிகளைச் சார்ந்த மண்டல வக்ஃப் கண்காணிப்பாளர்களிடம் (Zonal Superintendent of Wakfs) சான்று பெற்று 14.08.2012 மாலை 5.00 மணி வரை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ தேர்தல் நடத்தும் அதிகாரிக்கு (Returning Officer) அனுப்ப வேண்டும்.

தபால் மூலம் தங்கள் வாக்கை பதிவு செய்ய விரும்புகின்ற வாக்காளர்களுக்கு விண்ணபப்பங்கள் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட தபால் ஓட்டுகள் நேரடியாக தேர்தல் நடத்தும் அதிகாரியின் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிலோ அல்லது தபால் மூலமாகவோ 30.08.2012 காலை 10.00 மணி வரை மட்டும் பெறப்படும்.

தபால் ஓட்டு பெற விண்ணப்பிக்கும் வாக்காளர்கள் அதற்கான மாதிரி படிவத்தை தேர்தல் நடத்தும் அதிகாரியிடமிருந்தோ அல்லது மண்டல வக்ஃப் கண்காணிப்பாளர்களிடமிருந்தோ பெற்றுக் கொள்ளலாம்.

**தங்க கலியபெருமாள்,இ.ஆ.ப.,**
**தேர்தல் அலுவலர் மற்றும் அரசு செயலாளர்,**
**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்**
**மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை,**
**சென்னை – 9.**

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**